அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்ஜோதி!
அருட்பெருஞ்ஜோதி!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லா நெறியே குவலயமெல்லாம் ஓங்குக!

வேம்பிராய் - மீசாலை – கொடிகாமம் - இலங்கை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டம்

சன்மார்க்கநேசன்-2014

மார்கழிமாத இதழ்



தயவு

அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி

"இன்று வருமோ நாளைக்கே வருமோ
மற்றொன்று வருமோ அறியேன் என்கோவே
துன்னுமல வெம்மாயை யற்று
வெளிக்குள் வெளி கடந்து
சும்மா இருக்கும் சுகம்."

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமர்ந்தபேரொளியே
அன்புருவாம் பரசிவமே.

கடவுள் வழிபாடு

1. பிரபஞ்சத்தின் தோற்றம்
2. உயிரினங்களின் தோற்றமும் மனித இனத்தின் வளர்ச்சியும்
3. மனிதனின் வாழ்வாதாரமும் இடமும்
4. மனிதனும் இயற்கை வழிபாடும்
5. சிறுதெய்வ வழிபாடு
6. கந்தளிஜோதி வழிபாடு
7. முருக வழிபாடு ஆரம்பம்
8. மனிதனும் சிவ வழிபாடும்
    1. அருவ வழிபாடு
    2. உருவ வழிபாடு
    3. அருஉருவ வழிபாடு
9. சமய குரவர்களும், நால்வகை நெறிகளும்
    1. சரியை
    2. கிரியை
    3. யோகம்
    4. ஞானம்
10. சம்பந்தரும் கிரியைநெறி வழிபாட்டு முறையும்
11. அப்பரும் சரியைநெறி வழிபாட்டு முறையும்
12. சுந்தரரும் யோகநெறி வழிபாட்டு முறையும்
13. மாணிக்கவாசகரும் ஞானநெறி வழிபாட்டு முறையும்
14. இளமைக்காலமும் வள்ளலார் வழிபாடும்
15. சமரச சுத்த சன்மார்க்கமும் வள்ளலார் வழியும்
16. அருட்பெருஞ்ஜோதியும் வள்ளலாரும்
17. திரிதேகச் சித்தி (வள்ளலாரின்)

பிரபஞ்சத்தின் தோற்றம்

ஆகாய பூதத்தில் இருந்து வளி அணுக்கள் சலனசக்தியால் ஒன்றுடன் ஒன்று மோதும் பொழுது ஒலியும் ஒளியும் உண்டாகின்றன. ஆகவே இந்த உலகத்தில் முதல் முதலில் தோன்றியது சப்தபிரபஞ்சமே. அதன் பின்னர் வெப்பத்தினுடைய குளிர்ச்சியால். ஒளி அணுக்கள் குளிர்ந்து நீராகவும் நீர் ஆவியாகும் பொழுது மண் அணுக்களும் தேன்றின. இதுவே அகபுற வெளிப்பாடுகளேயாகும். இவ்வாறு பல ஒளி அணுக்களின் திரட்சியால் சூரியனும் தோன்றி விளக்கம் செய்ய ஆரம்பித்தன. இதுவே அகப்புற நிலையில் பூதங்களின் தோற்றமாகும். இவ் பூதங்களின் தேற்றம் யாவும் எல்லாம் வல்ல இறைவனுடைய தனிப்பெருங்கருணைச் செயலாகும். இனி புறப்புற நிலையில் பிரமாண்டமான சூரியக்கிரகத்தில் பிளவு ஏற்பட்டு பிளந்த அந்தக் கனலானது குளிர்ந்து மலைகளாகவும் காலப்போக்கில் சிதைவடைந்து மண் அணுக்களாகவும் விரிந்தே இந்த புவன போக பூமியானது தோற்றம் பெற்றன. ஏன் இந்த செயற்பாடுகள் யாவும் நடைபெற்றன என உற்றுநோக்கினால் கேவலநிலையில் இருந்த உயிர்க் கூட்டத்தை சகசநிலைக்கு மாற்றி உயிர்கள் யாவும் கருணை நிறைந்த பேரின்ப அனுபவத்தைப் பெறும் பொருட்டே புவன போகங்கள் தோற்றம் பெற்றன. இனி கேவலநிலையைப் பற்றி சற்று விளங்கிக்கொள்வோம்.

கேவலநிலை என்பது உயிர் அணுக்களை ஆணவ இருள் சூழ்ந்து ஆணவத்தினுடைய வலிமையால் உயிர்கள் எந்தவித அறிவு விளக்கமும் இல்லாமல் இருக்கின்ற நிலையே ஆகும். ஆதலினால் தான் ஆணவ மலத்தை மூலமலம் என்றும் அந்த மூலமலத்தினாலே உயிர்கள் படுகின்ற வேதனையைப் போக்கும் பொருட்டு இறைவனுடைய கருணையால் உயிர்களுக்கு மாயாகன்ம மலங்களைக் கூட்டிவைத்து படிப்படியாக அறிவு விளக்கமடைகின்ற நிலையே சகசநிலை ஆகும். உயிர்க்கூட்டங்கள் யாவும் சச்சிதானந்தப் பெருநிலையில் பேரின்பத்தை அனுபவித்து

ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செய்து கொண்டு மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்காகவே புவன போகங்கள் யாவும் தோற்றம் பெற்றன.

உயிர்களின் தோற்றம்

இவ்வாறு உயிர்க்கூட்டங்கள் சகசநிலையிற் கூடி முதலில் அமீபா, பக்ரீரியா, வைரஸ் போன்ற நுண் உயிரினங்களே தோற்றம் பெற்றன. இவ்வாறு பல நூற்றாண்டு காலம் அக வளர்ச்சியடைந்த நுண் உயிர்கள் ஓரறிவுடைய தாவரவர்க்கங்களாக இந்தப் பூமியில் உருவகம் பெற்றன. இத் தாவரவர்க்கமானது ஓரறிவுடைய பரிச உணர்ச்சி மட்டுமேயுள்ள உயிரினங்களாகும். இந்தப் பரிச உணர்வை நாம் விளங்கிக் கொள்வோமாயின் தொட்டாற்சிணுங்கி என்ற தாவரத்தை பரிசம் செய்யும் பொழுது அந்தத் தாவரத்தினுடைய இலைகள் சுருங்குவதனைக் காணுகின்றோம். இதே போலத்தான் தாவர வர்க்கங்கள் யாவும் பரிச உணர்வை மட்டுமே உணரக் கூடியதாக இருக்கின்றன. இவ்வாறாக தாவரயோனி வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று ஓரறிவு பூர்த்தியடைந்த ஆத்மாக்கள் சங்கு, சிற்பி போன்ற ஈரறிவுடைய உயிரினங்களாக அகவிளக்கமுற்று பல நூற்றாண்டுகளுக்குப் பின் அகவிளக்கமுற்று மூன்றறிவுடைய எறும்பு, பல்லி, பாம்பு, பூச்சி, புழுக்களாக அறிவுவிளக்கம் பெற்ற ஆத்மாக்கள் மூன்றறிவு பூர்த்தியடைந்த பின் பல நூற்றாண்டுகளுக்குப்பின் நான்கு அறிவுடைய பறவை இனங்களாக அக அறிவுவிளக்கம் பெற்று பல நூற்றாண்டுகளுக்கப்பின் ஐந்து அறிவுடைய புலி, கரடி, நாய், பன்றி, குரங்கு போன்ற மிருக வர்க்கங்களாக அறிவுவிளக்கம் பெற்று ஆத்மாக்கள் பலகோடி நூற்றாண்டுகளுக்கப்பின் ஐந்து அறிவு பூர்த்தியடைந்து ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடைய மனிதப்பிறவியாக ஆன்மாக்கள் அறிவுவிளக்கமடைந்து பல கோடான கோடி நூற்றாண்டுகளுக்கப்பிற்பாடு மன்னித்து வாழக்கூடிய

அறிவுவிளக்கம் பெற்று ஏழாவது அறிவாகிய ஞானத்தன்மை பெற்று ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்கின்ற உயர் பிறவியை எய்தி என்றும் பிறவாமல் இறவாமல் இறைத்தன்மையோடு வாழுகின்ற திரிதேகச்சித்தி பெற்று ஆன்மாவின் முடிந்த முடிவாகிய மரணமில்லாப் பெருவாழ்வை பெறுவதே இறைவனின் சம்மதம் ஆகும்.

மேற்குறித்த பிறவிகளை அடிப்படையாகக் கொண்டுதான் ஒரு ஆத்மா இந்தப் பூவுலகத்திலே எந்த இயல்போடு வாழுகின்றதோ அந்த இயல்பிற்கு ஒத்த பிறவியைத்தான் இறைவனாலே வழங்கப்படும் என்பதையும் இதை வைத்துத்தான் ஒரு ஆத்மா இந்தப் பூவுலகத்திலே பிறந்து இறந்து அறிவுவிளக்கம் உற்று ஏழு பிறவிகளையும் அடைந்து ஏழாவது பிறவியாகிய இறை இயல்பு கொண்ட கருணை நிறைந்ததும் பேரின்பமயமானதுமான வாழ்வை வாழ வேண்டும் என்பதே இறைவனுடைய சம்மதமும் சித்தப்பெருமக்களுடைய கூற்றுமாக இருக்கின்றது.

முக்கியகுறிப்பு:- உலகத்திலே மேலத்தேய நாடுகளில் வாழ்ந்த டாவின் உட்பட பல தீர்க்க தரிசிகள் கூர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கூற்று குழப்ப நிலை இல்லாமல் சிந்திக்க இருப்பதால் இதை சற்று சிந்திப்போமாக, பிறவியின் அடிப்படையில் எந்த வகையில் சிந்தித்தாலும் குரங்கிலிருந்து அதனுடைய இயல்பிற்கு ஒத்த மிருக இயல்புடைய குரங்கு தான் பிறக்க முடியுமே ஒழிய குரங்கிலிருந்து மனிதன் பிறக்க முடியாது. ஆகவே கூர்ப்புக் கொள்கையானது உலகமக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தவில்லை. இந்த விடயத்தை நமது இந்திய திருநாட்டிலே தென்புலத்திலே வாழ்ந்த ஞானிகளும் சித்தர்களும் குரங்கிலிருந்து மனிதன் பிறக்கவில்லை குரங்கிலிருந்து அறிவுவிளக்கமடைந்தவன் தான் மனிதன் என்று தெளிவாகக் கூறி நிற்கின்றார்கள். இந்த விடயத்தை சற்று ஆராய்வோமானால் குரங்கு மிருக இயல்புடையது ஆகவே பல நூற்றாண்டுகள் குரங்காகப் பிறவி எடுத்த ஆத்மா அக

விளக்கம் பெற்று அறிவு வளர்ச்சியடைந்தவனே மனிதன் என்பதை நாம் பெரியவர்களுடைய கூற்றின் வண்ணம் நின்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்னும் தெளிவாக நாம் சிந்திப்போமானால் மனிதனாகப் பிறவி எடுத்த ஆன்மாவாக இருந்தாலும் ஆறாவது அறிவாகிய நல்லதையும் கெட்டதையும் அறிந்து பகுத்தறிவுடைய கருணை நிறைந்த நல்ல அறிவுவழி நின்று வாழ்கின்றவனே மனிதன் என்றும், ஒரு மனிதப் பிறவி எடுத்த ஆத்மா கருணை உணர்வோடு எந்த ஆத்மாக்களுக்கும் துன்பம் விளைவிக்காமல் தயவுடன் வாழ்பவனே மனிதன் என்றும் ஒரு ஆத்மாவிற்கு மனித உணர்வு கிடைக்கப்பெற்றும் கருணையும் தயவும் நிறைந்து வெளிப்பட வாழாவிட்டால் அவனும் விலங்கே என்று திருவள்ளுவத்திலிருந்து திருவருட்பா வரையும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே மனித உடம்பு கிடைக்கப்பெற்ற ஆத்மாக்கள் ஒவ்வொருவரும் தான் மனித இயல்போடு இருக்கின்றோம் என்பதைத் தெளிந்து மிருக இயல்பை கருணையும் தயவும் நிறைந்து மனிதனாக வாழவேண்டும் என்பதே ஞானிகளுடையதும் சித்தர்களுடையதும் கூற்றாக இருக்கின்றது.

மனிதனின் வாழ்வாதாரமும் இடமும்

இவ்வாறாக மனிதப்பிறவி எய்திய ஆத்மாக்கள் தங்களுடைய இயல்பிற்கு ஒத்த காடும் காடுசார்ந்த இடத்திலும் (குறிஞ்சி), மலையும் மலைசார்ந்த இடத்திலும் (மருதம்), கடலும் கடல்சார்ந்த இடத்திலும் (முல்லை), வயலும் வயல்சார்ந்த இடத்திலும் (நெய்தல்), மணலும் மணல்சார்ந்த இடத்திலும் (பாலை), போன்ற ஐந்திணைகளிலும் குடியேறி வாழ்ந்தார்கள்.

காடும் காடுசார்ந்ததும்

குரங்கிலிருந்து அறிவுவிளக்கம் பெற்ற ஆத்மாக்கள் முதலில் காட்டிலே தான் வாழ்க்கையை ஆரம்பித்தன. இந்த காடும் காடுசார்ந்த பிரதேசத்திலும் வாழ்ந்த மனிதப்பிறவி எடுத்த ஆன்மாக்கள் மிருகங்களை வேட்டையாடி உண்டும், இறைச்சியைத் தேனில்ப்போட்டு பதப்படுத்தி நீண்ட நாட்களுக்குப் பழுதடையாது வைத்தும் காட்டிலே உள்ள பழவர்க்கங்களையும் உண்டு பசியைப் போக்கி வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும் கருணையில்லாமல் விலங்கினுடைய இயல்போடுதான் வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும் அவர்களது காட்டுமிராண்டித்தனமும் கருணையில்லாத செயற்பாடுகளும் அவர்களுக்குள்ளேயே பயம் அதிகரித்து கருணையில்லாத வாழ்வியலையே நடத்தி வந்தார்கள். இதனைக் கண்ட சில மனித உடம்பு பெற்ற ஆத்மாக்கள் கொஞ்சம் விழிப்பு நிலை ஏற்பட்டு பயத்தினாலேயே பயத்தைப் போக்க முயன்றார்கள். இதன் விளைவாகத்தான் மனித உடம்போடு கொடூரமான உருவங்களைக் கற்பனை செய்து அந்த கற்பனை செய்த உருவங்களின் மூலமாக கருணையில்லாத ஆன்மாக்களிடத்தில் பயத்தை ஏற்படுத்தி கொஞ்சம் விளக்கம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்திலே வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சிகளையும் கள்ளு போன்ற மதுவர்க்கங்களையும் படைத்து சிறிது பக்குவத்தைக் கொண்டுவர முயன்றார்கள்.

மலையும் மலை சார்ந்ததும்

குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்த மக்கள் தான் கொடூரமான உருவ வழிபாடாகிய காட்டேறி, மாடன் இது போன்ற கொடூரமான உருவ வழிபாட்டினை மேற்கொண்டு பக்குவமடைந்த ஆத்மாக்கள் மலையில் குடியேறி சூரியன் தான் இந்தப் பூமியை வழப்படுத்துகின்றது என எண்ணி சூரியனை வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். அதன் பிற்பாடு பல ஆண்டு காலங்கள் கழிந்து பக்குவமுற்ற ஆன்மாக்கள்

சூரியன் தன்னிச்சையாக இயங்க முடியாது என்று எண்ணி சூரியனைவிட அளக்க முடியாத பெரிய ஜோதி தான் இந்த உலகத்தை இயக்குகின்றது என்று எண்ணி கந்தளிஜோதியாக வழிபட்டு வந்தார்கள். இதன் பிற்பாடு பக்குவமடைந்து இந்த கந்தளிஜோதி வழிபாடே மலையும் மலைசார்ந்த இடத்திலும் வாழ்ந்த மக்கள் பக்குவமடைந்து சில நூற்றாண்டுகளுக்குப் பின் முருகவழிபாடாக உருவகம் பெற்றது. இவர்கள் தேனையும் பழவர்க்கங்களையும் முருகனுக்குப் படைத்து கருணையோடு வழிபாடு செய்து வந்தார்கள். இதன் விளைவாகத்தான் இன்றும் ஆசியப்பிராந்தியத்திலே மலைப்பிரதேசங்களில் முருகனுக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்யும் முறை இன்றும் நடைபெற்று வருகின்றது. இந்த மலைப் பிரதேசத்திலே வாழ்ந்த மக்கள் கொஞ்சம் பக்குவமுடையவர்களாகவும், கருணையுணர்வு உடையவர்களாகவும் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

இதன் தொடர்ச்சியானது எமது அடுத்த இதழில் வெளிவரும்.....

மார்கழி மாதத்தின் சிறப்பும் வழிபாடும்

உலக வாழ்க்கையில் இருளும் ஒளியும் மிகமுக்கிய பங்கை வகிக்கின்றது. ஒரு நாளை எடுத்துக்கொண்டால் இரவும் பகலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றது. இருள் விலகி ஒளி தோன்றும் காலமாகிய இந்தச் சந்தி மிகவும் வழிபாட்டுக்குரிய முக்கிய காலமாக இருக்கின்றது. இந்த நேரம் இருள் விலகி ஒளி தோன்றுகின்ற சந்தியாக இருப்பதால் இந்தக் காலை வழிபாடானது ஒரு மனிதனுக்கு சத்துவ குணத்தை வளர்க்கக் கூடியகாலமாக இருக்கின்றது. இதே போல மதியத்தை எடுத்துக்கொண்டால் சூரியன் உச்சிக்கு வந்து பூமியில் அதிக ஒளியும் வெப்பமும் மிகவும் அதிகரித்துக் காணப்படுவதால் இந்த நேரம் மனிதர்களிடையே இராசத குணத்தை

வெளிப்படுத்தக்கூடிய காலமாக இருப்பதால் நன்கு கருணையோடு வழிபாடு செய்து சத்துவ குணத்தோடு இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இனி ஒளிகுன்றி இருள் தோன்றுகின்ற அந்த காலமாகியசந்தி மனிதர்களிடையே தாமதகுணத்திற்குரிய காலமாக இருப்பதனால் இந்த சந்தியிலும் நன்கு விழிப்புணர்வோடு வழிபாடு செய்து சத்துவ குணத்தை வளர்ப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக ஒரு நாளிலே முக்குணத்திற்குரிய காலமாக இருப்பது போல இதற்குக் காரணமாக இருக்கின்றது இருளும் ஒளியும் என்பதனை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஒவ்வொரு கிழமையிலும் கூட ஒளியையும் இருளையும் மையப்படுத்தியே பெரியோர்கள் நாட்களிற்குப் பெயரிட்டார்கள். திங்களில் இருந்து சனி வரையும் முன்பு குறிப்பிட்டது போன்று ஒருகிழமையில் ஒளி உள்ளநாள் ஞாயிறாகவும் இருள் உள்ள நாள் சனியாகவும் கருதி இவ்வாறாக நாட்களிற்குப் பெயரிட்டார்கள். இதே போல ஒரு மாதத்தை எடுத்துக் கொண்டால் ஒளியினதும் இருளினதும் மாற்றங்களினால் 15நாட்கள் ஒளிக்காலமும் ஒளிதேய்ந்து இருள்வளருகின்ற இந்த 15நாட்கள் இருள்காலமாகவும் இறுதியாக அமாவாசையாகிய பூரணை வெளிப்படுகின்ற காலமாக இருப்பதால் முன்புகுறிப்பிட்டது போன்று சந்திகளில் முக்குணங்களும் வெளிப்படுமாகத்தான் இருக்கின்றது.

முன்குறிப்பிட்டது போன்று ஒவ்வொரு மாதத்திலும் கூட இருள்மழுங்கி ஒளிவெளிப்படும் காலம் சத்துவகுணத்தை ஏற்படுத்தும் காலமாகவும் இதேபோல ஒளிமழுங்கி இருள் சூழுகின்ற காலம் தாமதகுணத்தை வெளிப்படுத்தக் கூடிய காலமாகவும் இடைப்பட்டசந்தி பரிபூரணஒளி வெளிப்படுகின்ற இராசதகுணம் காலமாகவும் இருப்பதால் ஒவ்வொரு நாளும் வழிபடுவது போன்று ஒவ்வொரு மாதமும் தவறாது அந்த சந்திகளில் வழிபாடு செய்து சத்துவகுணத்தோடு இருப்பதற்கு வழிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதே போல ஒருவருடத்தை

எடுத்து ஆராய்வோமானால் 6மாதம் ஒளிக்காலமும் தையிலிருந்து ஆனிவரையும் ஆடியிலிருந்து மார்கழிவரை இருள் காலமாகவும் இருப்பதால் முன்பு குறிப்பிட்டது போன்று இருள்மழுங்கி ஒளி பிரகாசிக்கும் மாதம் மார்கழியும் தையுமாக இருப்பதால் இந்த சந்தி மார்கழி மாதத்திலிருந்து தையிலே பிரவேசிக்கின்ற காலம் சத்துவ குணத்தை வளர்க்கக்கூடிய காலமாக இருப்பதால் இந்த மார்கழிமாதத்திலே பலவகையான விரதங்களும் திருவெம்பாவை போன்ற விசேட வழிபாடுகளும் செய்து இந்த மாதத்திலே கருணையுணர்வோடு சத்துவகுணத்தை வளர்ப்பதற்கு இந்த மார்கழிமாத வழிபாடானது மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

இந்தக் காலத்தில் தான் மணிவாசகப்பெருமான் கருணையுணர்வோடு உலக மக்களை நன்கு உணர்ந்து திருவெம்பாவை பாடலைப் பாடித்தந்து விழிப்புணர்வை அதிகரிக்க வைப்பதற்கு மிகவும் கருணை கூர்ந்துள்ளார். ஆகவே தான் இந்த மார்கழி மாதங்களில் கருணையுணர்வோடு இருந்து ஆலயங்களிலே திருவாசகம் முற்றும் ஓதி வழிபாடு செய்வதை கண்டு நாம் எல்லாம் பேரானந்தத்தை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த அடிப்படையில்த்தான் சத்தியஞானக் கோட்டத்திலே தமிழிற்கு மார்கழி 1ம் திகதி தொடங்கி 31ம் திகதி வரையும் கருணையுணர்வோடு திருவாசகம் ஓதப்பட்டு வருகின்றது. ஏனெனில் உலகத்திலே மனிதப்பிறவி எடுத்த ஆத்மாக்கள் யாவோரும் கருணையுணர்வோடு கூடிய சத்துவகுணத்தை வெளிப்படுத்திக் கொண்டு உலக சகோதரத்துவ உணர்வு வெளிப்பட அமைதியுடனும் சாந்தியுடனும் ஜீவகாருண்யமே தெய்வ வழிபாடாகக் கொண்டு வாழவேண்டும் என்ற எண்ணத்திலேதான் சத்திய ஞானகோட்டத்தில் மார்கழி மாதம் முழுவதும் திருவாசகம் முற்றும் ஓதப்படுகின்றது. இந்த திருவாசகத்திலே தோய்ந்த வள்ளற்பெருமானாரும் திருப்பள்ளி எழுச்சி பாடல்மூலமாகவும் இன்னும் திருவருட்பாவில் பல பாடல்கள் மூலமாகவும் கருணையுள்ள சத்துவகுணம் வளரும் பொருட்டு மார்கழி மாதத்தின் சிறப்பையும் மார்கழி மாதத்திலே யாவரும்

இந்த மார்கழி மாதத்தை நல்ல முறையிலே வழிபாட்டிலே கழிக்க வேண்டும் என்றும், உலகம் அமைதியும் சாந்தியும் பெறுவதற்கு இந்த மார்கழி மாத வழிபாடானது சிறப்பு வாய்ந்ததாக இருப்பதால் இந்த மார்கழி மாதமானது ஞானிகளாலும் சித்தப்பெருமக்களாலும் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பதை உலகவர் யாவரும் அறிந்து மார்கழி மாதத்தின் சிறப்பையும் மார்கழி மாதத்தினுடைய வழிபாட்டையும் உலகவர் யாவரும் நன்கு உணர்ந்து இந்த மார்கழி மாதத்தை நல்ல கருணை நிறைந்த வழிபாட்டில் கழிப்போமாக.

மருத்துவக் குறிப்பு

பசளிக்கீரை

இதில் இரண்டு வகைகள் உண்டு.

1. கொடிப்பசளி

   இது சிவப்புத்தண்டுடன் மரங்களைப் பற்றி படர்ந்து வளரும். இலைகள் வட்டமாக தடித்துக் காணப்படும். காய்கள் சுண்டக்காயை விட சற்று சிறிதாக இருக்கும். பழம் கடும் சிவப்பாக இருக்கும்.

2. சிறுபசளி

   இது நஞ்சை நிலத்தில் ஈரமான பகுதிகளில் தரையில் படர்ந்து வளரும். சாம்பல் நிறத்தில் காணப்படும்.

குணங்கள்:- சலக்கடுப்பு, வெள்ளைபடுதல், வாந்தி ஆகியன குணமடையும்.

உபயோகிக்கும் முறை:- இந்தக் கீரையுடன் பருப்பு சேர்த்துக் கடைந்து முதல் அன்னத்தில் சேர்த்து நெய்விட்டு சாப்பிட அதிக ருசியாக இருக்கும். இது நல்ல இரத்தத்தை

உண்டாக்கும். தேகத்தில் உள்ள வெப்பத்தை தணிக்கும். தேகத்திற்கு பலத்தைக் கொடுக்கும். நீர்சுருக்கு, நீர்கட்டு இவற்றை நீக்கும். மலத்தை இளகாகத் தள்ளும் குன்ம வியாதி உள்ளவர்கள் இக் கீரையை பாகப்படி மிளகு சேர்த்து பருப்புடன் சமைத்து உண்டு வந்தால் நல்ல பலனை காணலாம்.

குறிப்பு:- பசலைக் கீரை கபதேகிகளுக்கு ஆகாது. அதிக தலத்தை உண்டு பண்ணும். இதன் காய்களை குழம்பில் கூட்டி சமைத்து உண்டால் நாவில் ஏற்படும் உஷ்ணத்தை வெகுவாக குறைத்து வாய் புண்கள் வராத வண்ணம் பாதுகாக்கும் வல்லமை உடையது.

மூவகை உடம்பு

1. வாத உடம்பு

குண்டாக இருப்பார், அறிவு மந்தமாகவும், கனத்த குரலாகவும், மூட்டு வலியும், தலை வலியும், நரம்பு சம்பந்தப்பட்ட வலியும், மலச்சிக்கலும் இருக்கும். அவர்கள் தண்ணீர் அதிகம் குடிக்கவும். உணவிலே புளிப்பு, துவர்ப்பினை விலக்கவும். பழங்கள் அதிகம் சாப்பிடலாம்.

2. பித்த உடம்பு

ஒல்லியாக இருப்பார், படபடப்பான பேச்சு, எவ்வளவு சாப்பிட்டாலும் நிறை இருக்காது. தூங்கி எழுந்தால் கூடு அதிகமாக இருக்கும். கண் சிவப்பாக இருக்கும், நடு நாக்கு மஞ்சள் நிறமாக இருக்கும். உணர்ச்சி அதிகமாக இருக்கும். அதிக சிரிப்பு, அதிக அழுகையும் இருக்கும்.

3. சிலேத்தும உடம்பு

உடம்பு குண்டாக இருப்பார். உடம்பு சரிந்து இருக்கும். அழுத்தமான பேச்சு, நோய் குறைவு, சளி காய்ச்சல் வரும்.

இனிப்புக் கட்டுப்பாடு தேவை. பால் குடிப்பதை குறைக்கவும். உணவில் மிளகு அதிகம் சேர்க்கவும்.

அகவல்பா

" ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின்று ஓங்கியஅருட்பெருஞ்ஜோதி"

உலகத்திலே வேத ஆகமங்கள் இறைவனால் உபதேசிக்கப்பட்டது என்று கூறி பெரியோர்களாலே போற்றி வணங்கப்படுவதைக் கண்கூடாகக் காணுகின்றோம். அத்தகைய உயர்நிலையில் உள்ள வேதாகமங்களிலே ஆகமமானது புற நிலையில் நின்று மூர்த்தி, தலம், தீர்த்தம், என ஆலய அமைப்பு முறைகளைக் கூறி புறநிலையிலே தேக இந்திரியங்களை ஒழுங்கு படுத்த ஆரணம் என்று சொல்லப்படுகின்ற வேதமானது நால்வகையாக விரிந்து இருக்கு, யசூர், சாமம், அதர்வனம் என்று ஆலய வழிபாட்டு முறைமையைக் கூறி சரியை நிலையில் இருந்து கிரியை நிலைக்குச் சென்று மேலும் பக்குவமடைந்து யோக நிலையில் இறைவனோடு பொருந்தி நின்று ஞானமாகிய கருணை அறிவைப் பெறுவதற்கு காரணமாக இருக்கின்றது. இவ்வண்ணமாக மனிதப்பிறவி எடுத்த ஆன்மா பக்குவ நிலைக்கு ஏற்ப சாரூப, சாலோக, சாமீப, சாயுச்சிய ஆகிய நால்வகை முத்திப்பேறுகளை வழங்குவதாக இருக்கின்றது. இத்தகைய உயர்ந்த ஆகமம், ஆரணம்(வேதம்) ஆகியவற்றில் முடிநிலைக்கு மேலாக எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனே யாவற்றுக்கும் மேலாக இருந்து செயற்படுகின்றார் என்பதை அறிய வேண்டும். இதனைத் தான் வள்ளற் பெருமானார்

" ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின்று ஓங்கியஅருட்பெருஞ்ஜோதி" என்று

விளக்கிக் கூறியுள்ளார்.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டம்
தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்
தொலைபேசி இலக்கங்கள்

தொடர்புகளுக்கு : 0217306010
கைபேசி எண்கள் : 0773321535
0775857934
0766156198

வள்ளலார் குறித்த விபரங்கள் கீழ்க்காணும்
இணையத்தளங்களில் காணலாம்.

1. www.Vallalar.org
2. www.Vallalarspace.com

தயவு
"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
கொல்லா நெறியே குவலயமெல்லாம் ஓங்குக."

என்னால் நீங்கள் உய்வடைவது சத்தியம்
இவ்வண்ணம்
அருட்பிரகாச வள்ளலார்.

தொகுப்பு : வள்ளல் அடிமை கனகசபாபதி கேதீஸ்வரன்.

கணணி தொழில்நுட்பம், பதிப்பு, ஆக்கம் :
தயவுச்செல்வி. டினோஜா இந்திரலோகன்.



THIRUARUTPRAKASA VALLALAR